
31 வது
ஆண்டறிக்கை 2020-2021
எல்லோருக்கும் நிறைவாழ்வு


அகில உலக பெண்கள் தினம்
2021
சவால்களை




Chengalpattu Rural Development Society
(CRDS)
TASOSS
RELIEF WORK
TAC
No.1 SPECIAL RICE

# இயக்குநர் உரை.....

பிறரை அன்பு செய்வதும், அயலாருக்கு உதவுவதும், பிறரை மன்னிப்பதும் கிறித்தவத்தின் முக்கிய விழுமியங்களாகும். நம் ஆண்டவராகிய இயேசு கிறித்து தான் வாழ்ந்த காலத்தில் தன் வாழ்வு முழுவதையும் தேவையில் உள்ள ஏழை எளிய மக்களுக்காக அர்ப்பணித்தார். தேவையில் உள்ளவர்களுக்கு நாம் எப்போதும் உதவ வேண்டும், பணிபுரிய வேண்டும், வாழ்வளிக்க வேண்டும் என்பது தான் அவருடைய உயர் கொள்கைகளின் உச்சம். அவர் இறப்பதற்கு முந்தின நாள் இராவுணவு வேளையில் அப்பத்தைக் கையிலெடுத்து அதைப்பிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகிறார். இந்த அப்பமானது அவருடைய உடலைக் குறிக்கிறது. அப்பத்தை பிடுகின்ற, உடைக்கின்ற நிகழ்வு, பிறர் வாழ்வதற்காக அவர் அனுபவித்த வேதனைகளையும், துயரங்களையும், தாங்கமுடியாத வலிகளையும் குறிக்கிறது. ஆண்டவராகிய இயேசு இந்த உலகம் வாழ, உயிர்கள் வாழ, தன்னுடலையும் உயிரையும் பிறருக்காக, உடைக்க, சிதைக்க, துன்பங்களை, துயரங்களை அனுபவிக்க வாய்ப்புக் கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுகிறார். பிறருக்கு பணிபுரிவது, பிறருக்காக பலியாவது, பிறருக்காக துன்பங்களை அனுபவிப்பது, பிறருக்காக நம்முடைய சௌகரியங்களை துறப்பது ஒரு வரம். நாம் பிறருக்காக வாழ்வது கடவுளின் மிகப்பெரிய ஆசீர்வாதம்.

நாமும் நம்முடைய பணிவாழ்வில் பிறருக்காக உழைக்க, உதவ வாய்ப்புகள் கிடைக்கின்ற போது இறைவனுக்கு மனமார நன்றி கூற வேண்டும். பணிவாழ்வில் பல இன்னல்களும், துயரங்களும், இழப்புகளும் ஏற்படுகின்ற பொழுது இறைவனுக்கு மனமுவந்து உரக்க நன்றி சொல்ல வேண்டும். நாம் செய்யும் நற்செயல்களை சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்துவார்கள், வெகுமதி அளிப்பார்கள், பாராட்டுகள் குவியும், சமூகத்தின் உயர் நிலையில் நம்மை கொண்டுப் போய் சேர்ப்பார்கள் அப்படியெல்லாம் எதிர்பார்த்து எச்செயலையும் நாம் செய்வது கிடையாது. ‘என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதர்களை பிடிப்பவன் ஆக்குவேன்” என்று அழைத்த இயேசுவின் இதய அன்புக்காக இச்செயல்களை நாம் செய்கிறோம்.

கிறித்தவர்கள் என்றால் கிறிஸ்துவைப்போல பிறருக்காக வாழ்பவர்கள், பிறரை வாழவைப்பவர்கள் என்று பொருள்படும். இதைக் கருத்தில் கொண்டு தான் நம் அன்னையாம் திருச்சபை ஏராளமான சமூகப்பணிகளை, வாழ்வாக்கும் பணிகளை செய்துக் கொண்டு வருகிறது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கமும் இயேசுவின் வாழ்வு தரும் பணிகளை செம்மையாய் திறம்பட ஆற்றி வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இறைவன் நம் அனைவரையும், நம் அனைத்து நற்செயல்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. செங்கல்பட்டு மறைமாவட்டத்தில் பிறர் அன்புப் பணியில் நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்கிட முனைப்புடன் செயல்பட்டு, ஆக்கப்பூர்வ செயல்பாடுகளை செய்ய சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு ஊக்கமும் ஊன்றுகோலுமாய் இருந்து வழிநடத்திவரும் செங்கை மறைமாவட்ட ஆயர் எம் நிறுவனத்தலைவர் மேதகு. டாக்டர்.அ. நீதிநாதன், துணைத்தலைவர் பேரருட்பணி. ஞா. பாக்கியரெஜிஸ், பொருளர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன், மறைமாவட்டத்தின் ஆலோசனைக் குழு அருட்பணியாளர்கள், நிறுவனத்தின் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நிறுவனத்தின் உபகாரிகளான காரிதாஸ் இந்தியா நிறுவனம், தமிழக சமூகசேவை மையம், கோல்பிங் இந்தியா, நபார்டு வங்கியின் நாபின்ஸ் நிதி நிறுவனம் மற்றும் ஏனைய உள்ளூர் மற்றும் வெளியூர் உபகாரிகள் நிறுவனத்தின் முயற்சிகளில், முன்னெடுப்புகளில் முக்கிய பங்கு வகித்து தன்னையே கரைத்துக்கொண்டு இலக்கு மக்களுக்காய் பணிபுரிந்து வரும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணியாளர்கள், அனைத்து பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இலக்கு மக்கள் அனைவருக்கும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் சார்பாக எம் நெஞ்சார்ந்த நன்றிகள்.

விளிம்புநிலை மக்களை மையமாக்கும் பணியில்

**அருட்பணி. இ. அந்தோணிராஜ்**
இயக்குநர் மற்றும் செயலர்,
செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்

# செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்
# திம்மாவரம், செங்கல்பட்டு 603 101
# 31வது ஆண்டறிக்கை
# (01.04.2020 முதல் 31.03.2021)



## முன்னுரை:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதி தொடங்கப்பட்டு அரசின் வழியாக முறையாக பதிவு செய்து கடந்த 30 ஆண்டுகளாக செங்கல்பட்டு அடுத்துள்ள திம்மாவரம் பகுதியில் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்நிறுவனம் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் கிராமப்புறங்களில் உள்ள பின்தங்கிய வகுப்பினர், நலிவடைந்தவர்கள், ஒடுக்கபட்ட மக்கள், மூன்றாம் பாலினத்தவர்கள், மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாடு அடைய தேவையான முன்னேற்ற பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. தொடர்ந்து செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 10 ஒன்றியங்களிலும், 109 பஞ்சாயத்துகளில் உள்ள 163 கிராமங்கள், 572 மகளிர் குழுக்கள், 7080 மகளிர் குழு உறுப்பினர்கள், மேலும், 54 மாற்றுத்திறனாளிகள் குழுக்களை உருவாக்கி, 468 மாற்றுத்திறனாளி குழு உறுப்பினர்களையும் உள்ளடக்கி தொடர்ந்து வழிநடத்தி வருகின்றது.

கிராமப்புறங்களில் உள்ள இலக்கு மக்களின் முன்னேற்றத்திற்காக இவர்களை சுயசார்பு அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய கொள்கையோடு கிராமப்புற மக்களுக்கு பல்வேறு திட்டங்களின் வழியாக வருவாய் பெருக்குத்திட்ட பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி, சுயதொழில் பயிற்சி என பல்வேறு பயிற்சிகளை வழங்கி கிராம மக்களை ஊக்குவித்தும் பேரிடர் காலங்களில் கிராமப்புற மக்களுக்கு தேவையான பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் அவசரக்கால நலத்திட்ட உதவிகள் போன்றவற்றை உடனடியாக களத்திற்கு சென்று நேரடியாக வழங்குவதில் மத்திய மற்றும் மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு பாராட்டும் பெற்றுள்ளது.

தொடர்ந்து செங்கல்பட்டு மறைமாவட்டத்தின்
**மேதகு ஆயர் அ. நீதிநாதன்**
அவர்களின் ஆலோசனையின்படி சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக கடந்த ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரையிலான ஓராண்டு திட்டப்பணிகளின் அறிக்கையினை உங்கள் முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



## குறிக்கோள்

தன்மானம்

தன்னிறைவு

தன்னாட்சி

## பணிதளங்கள்

### மாவட்டங்கள் : செங்கல்பட்டு, காஞ்சிபுரம்

### ஒன்றியங்கள் :

- திருப்போரூர்
- திருக்கழுக்குன்றம்
- காஞ்சிபுரம்
- வாலாஜாபாத்
- உத்திரமேரூர்
- அச்சிறுப்பாக்கம்
- மதுராந்தகம்
- காட்டாங்கொளத்தூர்
- இலத்தூர்
- சித்தாமூர்

## நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

- **காரிதாஸ் இந்தியாவின் சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டம்** (Caritas India-CMDRR)
- **கோல்பிங் இந்தியா திட்டம்** (Kolping India)
- **புதிய கண்ணோட்டம்** (New Thrust)
- **நாபின்ஸ் நுண்கடன் திட்டம்** (Nabfins)
- **இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் குழு காப்பீட்டுத் திட்டம்** (LIC)
- **சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம்** (Community Based Rehablitation)
- **காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு திட்டம்** (Cancer Awareness)
- **பெண்கள் கூட்டமைப்பு** (Women Federation)

# காரிதாஸ் இந்தியாவின் சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டம் (Caritas India-CMDRR)

பேரிடர் காலங்களில் அதிகமாக பாதிக்கப்படும் மாவட்டங்களில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களும் உள்ளன. ஒவ்வொரு வருடமும் நாம் பேரிடர்களை சந்தித்து கொண்டு தான் இருக்கின்றோம் மேலும் அதிக உயிர் சேதமும் பொருள் சேதமும் நேரிட்டு கொண்டு தான் இருக்கின்றன. நீர் ஆதாரங்கள் சரியாக பராமரிக்கப்படாததும், மக்களுக்கு பேரிடர் பற்றிய போதுமான முன்னறிவு இல்லாததும், பேரிடர் குறைக்கும் முயற்சியில் மக்களுடைய பங்கு மிகவும் குறைவாக இருப்பதுவுமே இதற்கு முக்கிய காரணங்கள் ஆகும்.

## நோக்கம்

- பேரிடர் காலங்களில் பொதுமக்கள் தாங்கள் வாழுகின்ற இடங்களிலுள்ள சாதக, பாதக சூழல்கள் பற்றிய விழிப்புணர்வை பெற செய்தல்.
- ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை உருவாக்குதல்.
- இயற்கையின் மீது மக்களுக்கு அக்கறை உருவாக்குதல்.
- பேரிடர் காலங்களில் தாங்கள் பெற்றுக்கொண்ட முன்னறிவு, விழிப்புணர்வு போன்றவைகளின் மூலம் பேரிடர் காலங்களில் சேதாரத்தை குறைத்தல்.
- பேரிடர் காலங்களில் மக்களின் பங்களிப்பு மற்றும் பணிகள் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்துதல்.

போன்றவைகளை இத்திட்டத்தின் வழியாக நமது நிறுவனமானது பாதிப்பு அதிகம் ஏற்படக்கூடிய 25 கிராமங்களை தேர்வு செய்து பொதுமக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு பயிற்சிகள், சாதக பாதக சூழ்நிலைகளுக்கான கிராம வரைபடம் வரைதல், பேரிடர் மீட்புக்குழு உருவாக்கம் மற்றும் வலுப்படுத்துதல், மீட்புக்குழுவின் பணிகளை கிராம மக்களுக்கு தெரிவித்தல், பள்ளிக்குழந்தைகளுக்கு பேரிடர் விழிப்புணர்வு அளித்தல், சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு அளித்தல், பஞ்சாயத்து ராஜ் அமைப்பு பற்றிய புரிதல் மற்றும் அரசு திட்டங்களை முறையாக பயன்படுத்துதல் போன்ற பல பயிற்சிகளை வழங்குகின்றது.



## 1 கிராம பேரிடர் மேலாண்மை குழு மற்றும் பணிக்குழு



கிராம பேரிடர் மேலாண்மைக் குழு மற்றும் பணிக்குழுவானது 25 பணி கிராமங்களிலும் ஏற்படுத்தப்பட்டு பஞ்சாயத்து ராஜ் உறுப்பினர்கள், கிராம செவிலியர்கள், இளைஞர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடக்கிய குழுவாக உருவாக்கம் பெற்று பேரிடர் கால முன்னேற்பாடுகள், விழிப்புணர்வு அளித்தல், அவசரகால உதவிகள் போன்ற பணிகளை செய்து வருகின்றது.

## 2 கழிவு மேலாண்மை

4

25 பணித்தள கிராமங்களில் அரசின் உதவியோடும் பொதுமக்கள் மற்றும் கிராம பேரிடர் மேலாண்மை குழுவின் ஒத்துழைப்போடும் கழிவுகளை பிரித்தெடுக்கும் முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பொதுமக்களே தங்களுடைய கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை என்று பிரித்து, மக்கும் குப்பைகளை சேமித்து உரமாகவும் மக்கா குப்பைகளான பிளாஸ்டிக் போன்ற இதர கழிவு பொருட்கள் அரசின் உதவியோடு அகற்றப்படுகிறது.

## 3 தன்னார்வலர்கள் ஈடுபாடு

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் திட்டங்களை முன்னெடுத்து செல்வதில் மிக பெரிய பலமாக இருப்பவர்கள் 863 தன்னார்வலர்கள். ஒவ்வொரு பேரிடர் நேரங்களிலும், திட்டம் சார்ந்த செயல்பாடுகளை முனைப்புடன் செய்வதில் தன்னார்வலர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பேரிடர் காலங்களில் கிராம மக்களுக்கு எச்சரிக்கை கொடுப்பதிலும் மக்களை மீட்பதிலும் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

## 4 அரசு திட்டங்கள்

அரசு நல திட்டங்களையும் சலுகைகளையும் கண்டறிந்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் காணவும் பயன்பெறவும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் கிராமங்களில் தொடர்ந்து உழைத்துக்கொண்டு வருகின்றது.

| வ. எண் | அரசுத் திட்டங்கள் | பயனாளர்கள் எண்ணிக்கை | மொத்த தொகை | |
|---|---|---|---|---|
| | | | தொகை | மொத்தம் |
| 1. | தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் | 106 | ரூ. 135/- | ரூ.14,31,000/- |
| 2. | வீடு கட்டும் திட்டம் | 31 | ரூ. 2,20,000/- | ரூ. 68,20,000/- |
| 3. | முதியோர் ஓய்வூதிய திட்டம் | 49 | ரூ.1000/- | ரூ. 49,000/- |
| 4. | தனிநபர் கழிவறை திட்டம் | 48 | ரூ.12,000/- | ரூ. 5,76,000/- |
| 5. | ஆடு வளர்ப்புத் திட்டம் | 30 | ரூ.6000/- | ரூ. 1,80,000/- |
| 6 | மாடு வளர்ப்புத் திட்டம் | 12 | ரூ.30000/- | ரூ. 3,60,000/- |
| 7 | மாற்றுதிறனாளி உதவித் தொகை | 682 | ரூ.1000/- | ரூ. 6,82,000/- |

## 5 நீர் வள மேலாண்மை



தமிழகம் முழுவதும் உள்ள நீர்நிலைகளை மீட்டெடுக்க தமிழக அரசு தொடங்கியுள்ளது. இலக்கு கிராமத்தின் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் திறமைப்படுத்தப்பட்டு நீர்நிலைகளை மீட்க அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளை பொதுப்பணித்துறை சீரமைக்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNRGES) கீழ் பணிகள் புதுப்பிக்கப்படுகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி திட்டம் (DRDA) மற்றும் PWD உடன் சேர்ந்து நீர்நிலைகள், நுழைவு வாய்க்கால்கள் உட்பட புதுப்பிக்கப்பட்டது.

மாவட்ட ஊரக வளர்ச்சி திட்டம் (DRDA) மற்றும் PWD உடன் சேர்ந்து நீர்நிலைகள், நுழைவு வாய்க்கால்கள் உட்பட புதுப்பிக்கப்பட்டது. நீர்நிலைகளை சரிசெய்தல், மறுசீரமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல், வழங்கல் வாய்க்கால்கள் கால்வாய்கள், மதகுகள் மற்றும் உபரி நீர் வழங்கல் ஆகியவை இந்தப் பணிகளில் அடங்கும். கிட்டத்தட்ட 50 முதல் 60 உறுப்பினர்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

| வ.எண் | மாவட்டங்கள் | ஒன்றியம் | கிராமம் | புதுப்பிக்கப்பட்ட நீர்நிலைகள் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | மதுராந்தகம் | கீழ்பட்டு | 1 |
| 2 | செங்கல்பட்டு | மதுராந்தகம் | தச்சூர் | 2 |
| 3 | செங்கல்பட்டு | மதுராந்தகம் | மலைப்பாளையம் | 1 |
| 4 | செங்கல்பட்டு | காட்டாங்குளத்தூர் | மேலச்சேரி | 1 |
| 5 | செங்கல்பட்டு | காட்டாங்குளத்தூா | பாலூர் | 2 |
| 6 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | விப்பேடு | 2 |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | முத்துவேடு | 2 |
| 8 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | மேட்டுப்பாளையம் | 1 |
| 9 | செங்கல்பட்டு | லத்தூர் | விழுதமங்கலம் | 1 |
| 10 | செங்கல்பட்டு | லத்தூர் | உடல்காரகுப்பம் | 1 |
| 11 | செங்கல்பட்டு | திருப்போரூர் | சிறுதாவூர் | 1 |
| 12 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஒரகடம் | 2 |
| 13 | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் | புலியூர் | 2 |
| 14 | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் | மாதாக்கோவில் | - |
| 15 | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | 1 |
| 16 | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் | கொக்கிலமேடு குப்பம் | - |
| 17 | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் | உதயம்பாக்கம் | 1 |
| 18 | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் | வெண்புருஷம் காலனி | 1 |
| 19 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | 2 |
| 20 | காஞ்சிபுரம் | உத்திரமேரூா | மல்லிகாபுரம் | 1 |
| 21 | செங்கல்பட்டு | சித்தாமூர் | வேட்ரம்பாக்கம் | 1 |
| 22 | காஞ்சிபுரம் | வாலாஜாபாத் | புதுகாலனி | 2 |

## 6 திட்ட மதிப்பீட்டுக் குழு

காரிதாஸ் இந்தியாவின் மதிப்பீட்டுக்குழுவானது நான்கு நாட்கள் பயணமாக சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டத்தினை மதிப்பீடு செய்தார்கள். திருமதி. பூஜா ராணா, உதவி மேலாளர், HR & DRR, திரு. ஜான் ஆரோக்கியராஜ், மாநில அதிகாரி, கருப்பொருள் மேலாளர் ஆகியோர் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள நான்கு கிராமங்களை பார்வையிட்டனர். முதல் நாள் களப் பணியாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. டாக்டர் ஜான் நிகழ்ச்சியின் அறிமுகத்தையும் மதிப்பீட்டு நாட்களையும் வழங்கினார். பின்னர் திருமதி. பூஜா அவர்கள் உங்கள் அனுபவத்திலுருந்து கற்றுக்கொள்வதே என் வருகையின் நோக்கம் என தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். திட்டத்தின் தொடக்கத்திலிருந்து ஊழியர்கள் தங்கள் அனுபவங்கள், வெற்றிகள் மற்றும் திட்டத்தின் சவால்களை பகிர்ந்து கொண்டனர்.






## 7 வீட்டுத்தோட்டம்

இலக்கு மக்கள் சமுக அளவிலும் குடும்பங்களிலும் சமையலறை தோட்டத்தை பயன்படுத்துகின்றனர். அதிகபடியான மகசூலை ஒருவருக்கொருவர் பகிர்ந்துக்கொள்கிறார்கள். அவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை உட்கொள்வது, அன்றாட உணவை தரமாக உட்கொள்வதற்கு வழிவகுக்கிறது.





# கோல்பிங் இந்தியா (Kolping India)



செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் ஓர் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமான 'கோல்பிங் இயக்கம்" செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. கடந்த 17 ஆண்டுகளில் நமது மறைமாவட்டத்திலுள்ள 40 பங்குகளில் 78 கோல்பிங் குழுக்கள் (இஸ்லாமியர் சிறுபான்மையினர் சகோதர சகோதரிகளையும் உள்ளடக்கிய) குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 1126 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.



இத்திட்டத்தின் வழியாக கடந்த 17 ஆண்டுகளில் தங்களின் குடும்பம் மற்றும் தனிநபர் வருவாயை பெருக்குவதற்கு இவ்வாண்டு 1230 நபர்கள் சுழற்சி முறையில் கடன்பெற்று பயன்பெற்றுள்ளனர். அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.77,33,850 ஆகும்.

## திட்டத்தின் குறிக்கோள்

கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்புள்ள மனிதர்களாகவும், பொறுப்புள்ள குடும்ப உறுப்பினர்களாகவும், தகுதி வாய்ந்த சுதந்திரமான உழைப்பாளர்களாகவும், பொறுப்புள்ள சமூக உறுப்பினர்களாகவும் விளங்கிட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக உள்ளது.

## நோக்கம்

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரையும் ஆன்மீகத்தில் இணைந்த பொருளாதார முன்னேற்றத்தில் தன்னிறைவை நோக்கி பயணிக்கச் செய்தல்.

## சமூக நல்லிணக்க செயல்பாடுகள்

கோல்பிங் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் நற்செய்தி மதிப்பீடுகளை தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதற்கு பங்குத்தளங்கள் மற்றும் கிளைபங்குகளில் உள்ள பல்வேறு பொது சேவை பணிகளில் தன்னார்வமுடன் ஈடுபட்டு பணிசெய்து வருவது போற்றுதற்குரியதாக அமைந்திருக்கிறது. தங்கள் கிராமத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்களின் ஆன்மீக மற்றும் பொருளா-தார தேவைகளை அறிந்து உதவும் பணிகளை கோல்பிங் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக தங்கள் மத்தியில் உள்ள நலிந்தோருக்கு உதவுதல், முதியோர் இல்லம் சந்திப்பு, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்,



ஆதரவற்று இறக்கும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களை நல்லடக்கம் செய்தல், நோய்வாய்ப்பட்டோருக்காக ஜெபித்தல், ஆலய வளாகம் மற்றும் பொது இடங்களை துப்புரவு செய்தல் போன்ற பணிகளை சிறப்பாக கோல்பிங் இயக்கங்கள் செயல்படுத்திக்கொண்டு வருகின்றன.

## பொருளாதார செயல்பாடுகள்

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரும் தங்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி ஒருமித்த கருத்துடன் செயல்பட்டு கல்வி, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்ற செயல்பாடுகளில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் ரூ.50 முதல் அதிகபட்சம் ரூ.500 வரை சேமிக்கின்றனர். வங்கிகளில் கூட்டுக்கணக்கு துவங்கி நிதியினை பராமரிக்கவும், குழு உறுப்பினர்களின் தேவைக்கு உள்கடன் வழங்கி தங்கள் தேவைகளை பூர்த்திசெய்தும் வருகின்றனர்.

## கோல்பிங் இறப்பு நிதி

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் இயற்கை மற்றும் விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு கோல்பிங் இறப்பு நிதி வழியாக ரூ.5000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு நான்கு நபர்களுக்கு ரூ.20,000 இறப்புத்தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது.

| வ.எண் | கிராமம் | இறந்தவரின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | புலியூர் | ஏ.வேளாங்கன்னி | ரூ.5000.00 |
| 2 | புலியூர் | சின்னப்பன் | ரூ.5000.00 |
| 3 | மேல்மணப்பாக்கம் | தமிழரசி | ரூ.5000.00 |
| 4 | குப்பைநல்லூர் | இருதயமேரி | ரூ.5000.00 |
| | | மொத்தம் | ரூ.20000.00 |

## கோல்பிங் திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படும் திட்டங்கள்

- வருவாய் பெருக்குத் திட்டம் (Income Generation Programme)
- கூட்டுவருவாய் பெருக்குத் திட்டம் (Collective Income Generation Programme)
- கறவைமாடு வளர்ப்புத் திட்டம் (Milch Animal programme)
- வீடுகட்டும் திட்டம் (Housing Support Programme)
- தொழிற்பயிற்சி கல்வித் திட்டம் (Vocational Training programme)
- தனிநபர் கழிவறைத் திட்டம் (Individual Toilet programme)



## குழு சுழல்நிதி தொழிற்கடன் பெற்றவர்கள்

| வ.எண் | பங்கு | கிராமத்தின் பெயர் | குழுவின் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஏனாத்தூர் | ஏனாத்தூர் | அன்னை தெரேசா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 2 | ஒரகடம் | ஒரகடம் | ஆரோக்கிய மாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 3 | வல்லம் | இருங்குன்றபள்ளி | செவ்வந்தி கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 4 | பெருங்கோழி | பெருங்கோழி | புனித சூசையப்பர் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 5 | பெருங்கோழி | பெருங்கோழி | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 6 | கம்மாளம்பூண்டி | கம்மாளம்பூண்டி | குறிஞ்சி கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 7 | கம்மாளம்பூண்டி | கம்மாளம்பூண்டி | சிறுமலர் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 8 | பல்லாவரம் | பல்லாவரம் | அன்னை தெரேசா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 8 | கழனிப்பாக்கம் | கழனிப்பாக்கம் | அன்னை தெரேசா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 10 | கடப்பாக்கம் | கடப்பாக்கம் | குழந்தை தெரேசா கோல்பிங் குடும்பம் | 1,00,000.00 |
| 11 | தச்சூர் | தச்சூர் | மழைமலைமாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| மொத்தம் | | | | 10,00,000.00 |

## கோல்பிங் சுற்றுசூழல் மேலாண்மைத் திட்டம்

கோல்பிங் சுற்றுசூழல் மேலாண்மை திட்டம் மறைமாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் செயல்படுத்த முடிவு செய்து, கிராமங்களில் சுற்றுசூழலை மேம்படுத்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைந்து தேர்வு செய்யப்பட்ட பகுதிகள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | ஒன்றியம் | ஊராட்சி | கிராமம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | பெருங்கோழி | பெருங்கோழி |
| 2 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | கம்மாளம்பூண்டி | கம்மாளம்பூண்டி |
| 3 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | மருதம் | மருதம் |
| 4 | காஞ்சிபுரம் | வாலாஜாபாத் | ஏனாத்தூர் | ஏனாத்தூர் |
| 5 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஆலத்தூர் | ஆலத்தூர் |
| 6 | செங்கல்பட்டு | திருப்போரூர் | பையனூர் | அந்தோணியார் நகர் |



## திட்ட கிராமங்களில் வழங்கப்பட்ட பயிற்சிகள்:

- கிராம அளவிலான திட்ட அறிமுகம்
- புதிய குழுக்களுக்கான கருத்துப் பகிர்வு
- தலைமைத்துவ பயிற்சி
- புத்தக பராமரிப்புப் பயிற்சி
- சுகாதார விழிப்புணர்வு பயிற்சி
- வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி
- கிராம அளவிலான கோல்பிங் கூட்டமைப்புப் பயிற்சி
- கிராம வளர்ச்சிக் குழு பயிற்சி
- கிராம மக்கள் பங்களிப்புடன் கூடிய பகுப்பாய்வு செய்தல்

மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும் கோல்பிங் குழு உறுப்பினர்களுக்கு இவ்வாண்டு கொடுக்கப்பட்டுள்ளன.

## கோல்பிங் உறுப்பினர்களின் வளர்ச்சிகள்

- கோல்பிங் இயக்கத்தின் வழியாக குழுக்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.
- சேமிக்கும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து சேமித்து வருகின்றனர்.
- சமூக ஈடுபாடுகளில் கவனம் செலுத்துகின்றனர்
- திட்டம் சார்ந்த பயிற்சிகளின் மூலம் தனிநபர், குடும்பம், குழுக்கள் மற்றும் கிராமங்களில் இன்றைய சூழலை அறிந்துக்கொள்கின்றனர்.
- சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிய தெளிவு பெற்றுள்ளனர்.
- ஆன்மீக வளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டுள்ளர்.
- சிறந்த குடிமக்களாக சமூகத்தில் வாழ ஊக்கம் பெற்று வருகின்றனர்.

## கோவிட் 19 நிவாரண உதவிகள் : (Kolping Cares)

உலகையே அச்சுறுத்தி பல உயிர்களை பலிவாங்கிய கோவிட் 19 கொரோனா வைரஸ் தொற்று பரவிய காலகட்டத்தில் அரசால் பிறப்பிக்கப்பட்ட 144 தடை உத்தரவால் பொதுமக்கள் வாழ்வாதாரத்தை இழந்து மிகவும் சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டனர். இந்நிலையில் **கோல்பிங் கேர்ஸ்** (KOLPING CARES) திட்டத்தின் மூலம் 150 குடும்பங்களுக்கு மளிகை மற்றும் உணவு பொருட்கள் வழங்கப்பட்டது.



## கர்ப்பிணி தாய்மார்களுக்கு நிவாரண உதவி :

கொரோனா வைரஸ் தொற்று பரவல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து மருத்துவமனைக்கு செல்ல முடியாமல் ஊட்டச்சத்துள்ள உணவு பொருட்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு 07.11.2020 அன்று ரூ.1000 மதிப்பிலான உணவுபொருட்கள் மற்றும் மருத்துவ செலவினங்களுக்காக ரூ.1000 நிதியுதவி என தலா ரூ.2000 10 நபர்களுக்கு மொத்தம் ரூ.20,000.00 திரு.அகஸ்டின் அவர்களால் நிவாரண உதவியாக வழங்கப்பட்டது. பயனாளிகள் விவரம்:

| வ.எண் | கிராமம் | கர்ப்பிணி பெயர் | கணவன் பெயர் |
|---|---|---|---|
| 1 | சிறுதாவூர் | கௌசல்யா | பிரகாசம் |
| 2 | சிறுதாவூர் | நவீனா | அம்பேத்குமார் |
| 3 | ஒரகடம் | மாதவி | மாசிலாமணி |
| 4 | ஒரகடம் | சோபியா | ரஞ்சித் |
| 5 | ஒரகடம் | சசிகலா | அமுல்ராஜ் |
| 6 | மேல்மணப்பாக்கம் | உஷா | வினோத் |
| 7 | மேல்மணப்பாக்கம் | அஜந்தா | சக்திவேல் |
| 8 | மேல்மணப்பாக்கம் | கோமளா | ரவி |
| 9 | மேலச்சேரி | ஷாலினி | ரூபன் |
| 10 | மேலச்சேரி | ராதா | சதீஷ் |




## ஹெல்ப் லைன் (HELP LINE) உதவிகள்:

கொரோனா பெருந்தொற்று காலத்தில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் தேவையில் உள்ள முதியோர்கள்,ஆதரவற்றவர்கள்,மாற்றுத்திறனாளிகளுக்கான விவரப்பட்டியலை பெற்று தமிழக அரசின் ஹெல்ப் லைனில் தொடர்புகொண்டு நிவாரண பொருட்களை பெற்று அந்தந்த தாலுகா அலுவலகம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களால் பணியாளர்கள் மூலம் ரூ.1000 மதிப்புள்ள உணவு பொருட்கள் பயனாளிகளின் வீட்டிற்கே சென்று வழங்கப்பட்டது.

அவ்வாறு ஒன்றியம் வாரியாக பயனடைந்தவர்களின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | ஒன்றியம் | மாற்றுத்திறனாளி எண்ணிக்கை | முதியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அச்சிறுப்பாக்கம் | 11 | 2 |
| 2 | திருப்போரூர் | 12 | |
| 3 | வாலாஜாபாத் | 75 | |
| 4 | காட்டாங்கொளத்தூர் | 3 | |
| 5 | உத்திரமேரூர் | 17 | 10 |
| 6 | இலத்தூர் | 1 | |
| 7 | காஞ்சிபுரம் | 12 | 16 |
| மொத்தம் | | 131 | 28 |

## உ. புதிய கண்ணோட்டம் (New Thrust)

புதிய கண்ணோட்டத் திட்டப்பணியானது தமிழக சமூகப் பணிமையம் (TASOSS- திருச்சி) நிறுவன வழிகாட்டுதலுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் இலக்கு மக்களிடம் கடந்த 20 ஆண்டுகளாக 6 கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த 2020 ஆம் ஆண்டில் 6 வது கட்டத்தின் தொடர்செயல்பாடாக தற்போது 2018 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரை 3 ஆண்டுகள் தொடர்செயல்பாடாக கீழ்கண்ட கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகின்றது.

| வ.எண் | ஒன்றியம் | கிராமம் | மகளிர் குழுக்களின் எண்ணிக்கை | குழந்தைகள் பாராளுமன்றம் |
|---|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | ஏ.பி சத்திரம் | 4 | 1 |
| 2 | காட்டாங்கொளத்தூர் | இருங்குன்றபள்ளி | 9 | 1 |
| 3 | வாலாஜாபாத் | சிறுவாக்கம் | 4 | 1 |

### கடந்த 3 ஆண்டுகளில் திட்ட கிராமங்களில் கிராம மக்களின்பயன்பாடுகளின் விவரம்:

- மக்கள் பங்கேற்புடன் கூடிய கிராம ஆய்வு (PRA) மேற்கொள்ளப்பட்டு கிராமம் மற்றும் கிராமத்தை சார்ந்த வளங்களை குறித்து அறிந்துக்கொண்டனர்.
- PRA ஆய்வின் படி கிராம பொதுவளங்களை குறித்து தெரிந்துக்கொண்டனர்.
- கிராமத்திலுள்ள நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை அடையாளம் கண்டு அவற்றை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருதலுக்காக கிராமசபை கூட்டத்தில் பங்கேற்று மனு அளித்து அடிப்படை உரிமைகளை பெறுவதற்காக முயற்சி மேற்கொண்டுள்ளனர்.
- பொதுக்கால்வாய்கள் மறுசீரமைப்பு, குளம்-குட்டைகள் தூர்வாருதல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகளின் கீழ் சிறுவாக்கம் கிராமத்தில் உள்ள 3 குளங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- ஏ.பி சத்திரம் கிராமத்தில் அரசுடன் இணைந்து புதிய கால்வாய் ஊரைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ளது.16 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா பெறப்பட்டுள்ளது.
- இருங்குன்றபள்ளி கிராமத்தில் இயங்கி வருகின்ற தனியாருக்கு சொந்தமான மது உற்பத்தி ஆலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவின் மூலம் கிராம மக்களுக்கு பாதிப்புகள் உண்டாகும் நிலையில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டு போராட்டத்தின் அடிப்படையில் கம்பெனியானது 6 மாத காலம் நிறுத்திவைக்கப்பட்டது. பின்னர் கிராம மக்களின் பிரச்சினைகளுக்கு முறையாக தீர்வு காணப்பட்டு கிராம மக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் கழிவுகளை அகற்றுதலுக்கான வழிமுறைகள் முறைப்படுத்தப்பட்டது.



## வாழ்வாதாரம்:

மேற்கண்ட திட்ட கிராமங்களில் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு மிகவும் ஏழ்மையான பின்தங்கிய நிலையில் உள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு EDP போன்ற வாழ்வாதார பயிற்சிகள் அளிக்கப்பட்டது. (டிபன்கடை, தேநீர் கடை, பெட்டிக்கடை, துணிவியாபாரம்) போன்ற சிறுதொழில்கள் தொடங்கி கடந்த 3 ஆண்டுகளில் 40 முதல் 50 சதவீதம் வரை கிராம மக்களின் வருமானம் உயர்த்தப்பட்டுள்ளது.



வாழ்வாதார மேம்பாட்டு பணியாக திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திலுள்ள புலியூர் கிராமத்தில் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் அடிப்படையில் குழு உறுப்பினர்கள் 121 நபர்கள் கூட்டமைப்பாக இணைந்து ரூ.15000 முதலீட்டுத் தொகையை கொண்டு சிறுதொழில் (அரிசி வியாபாரம்) தொடங்கினர். தற்போது அவர்கள் சிறுதொழிலின் மூலம் ரூ.4,75,676 வரை நிதி உருவாக்கி தங்களின் வாழ்வாதாரத்தை பெருக்கி முன்னேற்றம் கண்டுள்ளனர்.

மேற்கண்ட 4 கிராமங்கள் திட்ட ஆண்டான 3 ஆண்டுகளில் பொதுவளங்கள், சிறுதொழில், சுயதொழில் செய்தல் ஆகியவற்றில் தங்களை ஈடுபடுத்தி தாங்களே வாழ்வின் அனைத்து நிலைகளிலும் மாற்றம் கண்டுள்ளனர்.

## குழந்தைகள் பாராளுமன்றம்:

புதிய கண்ணோட்ட திட்டப்பணியானது திட்ட கிராமங்களில் உள்ள குழந்தைகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான கல்வி, பொதுஅறிவு, இன்றைய அறிவியல் சிந்தனைகள், தலைமைத்துவம், அரசியல் நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்துக்கொள்ளும் வகையில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் பணிசெய்கின்ற 10 ஒன்றியங்களில் உள்ள 50 கிராமங்களில் 65 குழந்தைகள் பாராளுமன்றங்கள் அமைக்கப்பட்டு குழந்தைகள் பாராளுமன்றம் குறித்த பல்வேறு தகவல்கள் மற்றும் பயிற்சிகளின் வாயிலாக இவர்களிடம் பல்வேறு நற்பண்புகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. இதன் ஒருபகுதியாக குழந்தைகள் அனைவரும் ஒன்றிணைந்து குழுக்களாக சேமித்தும் வருகின்றனர். இதுவரை குழந்தைகள் பாராளுமன்றங்களின் மூலம் ரூ. 2,00,000 வரை சேமித்து பயன்பெற்று வருகின்றனர்.





## குழந்தைகள் பாராளுமன்றங்களின் வாயிலாக கீழ்கண்ட செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

- கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை கிராம ஊராட்சி அளவில் கிராமசபை கூட்டத்தில் கேட்டு பெறுகின்றனர்.
- கிராமத்தில் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பேணிக்காப்பதற்கான முயற்சியாக கிராமங்கள்தோறும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தனிநபர் கழிவறைக்கான திட்டத்தை கிராமங்களுக்கு பெற்றுள்ளனர்.
- இன்றைய சூழலில் இயற்கையை பாதுகாக்கும்வண்ணம் பிளாஸ்டிக் விழிப்புணர்வு, கொரோனா நோய் குறித்த பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

### சிறப்பு செயல்பாடு – (கொரோனா)

➔ கடந்த 2019 ல் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கில் திட்டம் சார்ந்த கிராமம் மற்றும் மாவட்ட அளவில் பெரும்பான்மையான கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு டாசோஸ் நிறுவனம் மூலம் முகக்கவசம் வழங்கப்பட்டுள்ளது.

➔ திட்ட கிராமங்களான ஏ.பி.சத்திரம், இருங்குன்றபள்ளி, சிறுவாக்கம் ஆகிய கிராமங்களில் சுமார் ரூ.50,000 மதிப்பிலான உணவுப்பொருட்கள் கொரோனா பெருந்தொற்றின் ஊரடங்கு காலத்தில் வாழ்வாதாரத்திற்காக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 4. இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் குழு காப்பீட்டுத் திட்டம்: (LIC -Group Insurance)

### எல்.ஐ.சி யின் ஜனஸ்ரீ பீம யோஜனா என்ற திட்டத்தை பற்றிய சில துளிகள்

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் எல்.ஐ.சி உடன் இணைந்து எல்.ஐ.சி யின் ஜனஸ்ரீ பீம யோஜனா என்ற திட்டத்தை மிக சிறப்பாக கடந்த 17 ஆண்டு காலமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது

இந்த திட்டத்தில் விபத்தில் மரணம் ஏற்பட்டாலும், இயற்கை மரணம் அடைந்தாலும் ரூ.20,000 வாரிசுதாரர்களுடைய வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் சென்ற ஆண்டு ஏற்பட்ட கொரோனா வைரஸ் காரணமாக தற்காலிகமாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தபடவில்லை. எனவே ஏற்கனவே 2019-2020 ஆம் ஆண்டு 5678 உறுப்பினர்கள் இத்திட்டத்தில் இணைந்திருந்தனர். 2020 ஏப்ரல் 30 ம் தேதி வரை இத்திட்டம் நடைமுறையில் இருந்தது. ஏப்ரல் மாதத்தில் கீழ்கண்ட 11 நபர்களுக்கு இறப்பு இழப்பீட்டு தொகையானது கொரோனா வைரஸ் காரணமாக பெறமுடியவில்லை. ஊரங்கு தளர்விற்கு பிறகு விடுபட்டவர்களுக்கான இழப்பீட்டுத்தொகை வாரிசுதாரர்களுக்கான வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

# பயனாளிகள் விவரம்

| வ.எண் | இறந்தவர் பெயர் | விலாசம் | வாரிசுதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | சுப்பிரமணி | பள்ள தெரு, திருக்கழுக்குன்றம் | சரஸ்வதி | 20,000.00 |
| 2 | மேனகா | கடும்பாடி, திருக்கழுக்குன்றம் | பூமிநாதன் | 20,000.00 |
| 3 | பச்சமுத்து | புலியூர், உத்திரமேரூர் | கீதா | 20,000.00 |
| 4 | சாரதா | ஒரகடம், திருப்போரூர் | யுவராஜ் | 20,000.00 |
| 5 | அந்தோணிசாமி | முத்துவேடு, காஞ்சிபுரம் | மரியா | 20,000.00 |
| 6 | சேவியர் | தச்சூர், மதுராந்தகம் | லூர்துசாமி | 20,000.00 |
| 7 | சாந்தி | உத்தமநல்லூர், அச்சிரப்பாக்கம் | ஆறுமுகம் | 20,000.00 |
| 8 | பரசுராமன் | மெய்யூர்குப்பம், சட்ராஸ் கல்பாக்கம் | நாகூரம்மாள் | 20,000.00 |
| 9 | சுரேஷ் | தழுதாளிகுப்பம், கடப்பாக்கம் செய்யூர் | பக்கிரி | 20,000.00 |
| 10 | பச்சமரத்தான் | புதுப்பட்டினம்குப்பம், கல்பாக்கம் | மேக்காவன் | 20,000.00 |
| 11 | செல்வி | ஜமீன் பெரும்பாக்கம், இலத்தூர் | முருகன் | 20,000.00 |
| | | மொத்தம் | | 2,20,000.00 |

## காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டம் (Cancer Awarness Programme)

### புற்றுநோய்

புற்றுநோய் என்பது கேடுதரும் உடற்கட்டிகளால் ஏற்படும் பல நோய்களின் ஒரு பொதுவான பெயர் ஆகும். இயல்புக்கு மாறாக கட்டுபாடற்று உயிரணுக்கள் பிரிந்து பெருகுவதால் இழையங்களில் ஏற்படும் மிகைப்பெருக்கம் அருகிலுள்ள இழையங்களில் ஊடுருவி பல்வேறு உடற்பகுதிக்கும் பரவும் ஆற்றலைக் கொண்டிருப்பின் அவை கேடுதரும் கட்டிகள் அல்லது புற்றுநோய் எனப்படும்.

### புற்றுநோய்க்கான காரணம்

புகை பிடித்தல், மது அருந்துதல், போதை பொருட்களை பயன்படுத்துதல், மின் அணு உலை கதிர்வீச்சு, செல்போன் டவர்கள், டயர் தொழிற்சாலைகள், விவசாயத்தில் இரசாயன பொருட்கள் பயன்பாடு, அதிக கொழுப்பு நிறைந்த உணவுகளை உண்பது, உடற்பயிற்சி இன்மை, மரபு வழி போன்ற காரணிகளாலும் இந்நோய் பரவுகிறது. வைரஸ் தொற்று தாக்குதலாலும் புற்றுநோய் உருவாகிறது என மருத்துவ ஆய்வுகள் முன்வைக்கின்றன.

## புற்றுநோய் வகைகள்:

- மார்பக புற்றுநோய்
- கருப்பை வாய் புற்றுநோய்
- வாய்ப்புற்றுநோய்
- வயிற்று புற்றுநோய்
- மலக்குடல் ஆசனவாய்புற்றுநோய்
- நுரையீரல் புற்றுநோய்




எவ்வளவு தான் நவீன மருத்துவ கண்டுபிடிப்புகள் இருந்தாலும் புற்றுநோய் இன்றளவும் ஒரு உயிர்கொல்லி நோயாகவே உள்ளது. ஏனெனில் உலகில் உள்ள நோய்களிலேயே புற்று நோயின் தாக்கத்தினால்தான் அதிகளவு உயிரிழப்பானது ஏற்படுகிறது. என்று ஆய்வு முடிவுகள் கூறுகின்றது.
உலக அளவில் புற்றுநோய் மனித இறப்புக்கான இரண்டாவது இடத்தில் இருப்பதாக அமெரிக்க புற்றுநோய் கழகம் தெரிவிக்கிறது. கடந்த 8 ஆண்டுகளில் புதிதாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள் 14 மில்லியன் பேர் இருப்பதாகவும் அவர்களில் 8.2 மில்லியன் நோயாளிகள் இறந்துபோனதாகவும் உலக சுகாதார நிறுவனம் **(World Health Organisation)** கணித்துள்ளது. அடுத்த 20 ஆண்டுகளில் இன்னும் 70 சதவிகிதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அச்சுறுத்துகிறது.

புற்றுநோயை பொறுத்தவரை வருமுன் காப்பதுதான் சிறந்தது. இந்த சூழலில் கிராம மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி புற்றுநோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை குறைத்து புற்றுநோயில்லா எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கோடு காரிதாஸ் இந்தியா மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் இணைந்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டம் தொடங்கப்பட்டது.

எழுவோம் இயக்கம் புற்றுநோய் விழிப்புணர்வு திட்டத்தின் மூலம் காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 2 மாவட்டங்களில் 7 ஒன்றியங்களிலுள்ள 18 கிராமங்களை தேர்வு செய்து புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு செயல்பாடுகளை செயல்படுத்தி வருகின்றது.

## நோயாளிகளை அடையாளம் காணுதல்:

புற்றுநோய் ஒழிப்பு பிரச்சார திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் 2019 ஆம் ஆண்டை தொடர்ந்து 2020 -2021 ஆம் ஆண்டு சி.ஆர்டி.எஸ் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டு கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண் | மாவட்டம் | ஒன்றியம் | கிராமம் | 2019-2020 நோயாளி எண்ணிக்கை | பாலினம் | | இறந்தவர் விவரம் | | 2020-2021 புதிய நோயாளிகள் | | மொத்த நோயாளிகள் | | மருத்துவம் பெறுபவர் | மருத்துவம் பெறாதவர் | அறுவை சிகிச்சை செய்தவர் | அறுவை சிகிச்சை செய்யாதவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | | | | |
| 1 | செங்கல்பட்டு | 6 | 14 | 25 | 7 | 18 | - | 1 | 1 | 1 | 8 | 18 | 24 | 2 | 17 | 9 |
| 2 | காஞ்சிபுரம் | 1 | 4 | 3 | 1 | 2 | - | - | - | 1 | 1 | 3 | 4 | - | 3 | 1 |
| | மொத்தம் | 7 | 18 | 28 | 8 | 20 | - | 1 | 1 | 2 | 9 | 21 | 28 | 2 | 20 | 10 |

## தன்னார்வலர்களுக்கான பயிற்சி:

06.10.2020 அன்று புற்றுநோய் ஒழிப்பு எழுவோம் இயக்கம் திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் தன்னார்வலர்கள் தேர்வுசெய்யப்பட்டு திட்ட கிராமங்களில் விழிப்புணர்வு முகாம்கள், மருத்துவ பரிசோதனை காலங்களில் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு, நோயாளிகளை ஒருங்கிணைத்தல், ஆற்றுப்படுத்துதல் போன்ற பயிற்சிகள் வழங்க மாவட்ட அளவில் 80 தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டு சி.ஆர்.டி.எஸ் பயிற்சி கூடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.






## எழுவோம் இயக்கம் – புற்றுநோய் ஒழித்தல் மருத்துவ முகாம்

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கத்தின் சார்பாக எழுவோம் இயக்கத்தின் புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து பொத்தேரி எஸ்.ஆர்.எம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மூலம் மருத்துவ முகாமும், சென்னை டி.டி.கே மருத்துவமனை மூலமும் மருத்துவ முகாம்களும் நடைபெற்றது. இதில் புற்றுநோயின் அறிகுறிகள், பாதிப்புகள், சிகிச்சைகள் குறித்து மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு மருத்துவமுகாம் நடத்தப்பட்ட கிராமங்கள் மற்றும் பயனாளிகள் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ.எண் | தேதி | கிராமம் | நிறுவனம் | கலந்துக்கொண்டோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 15.12.2020 | கருவேப்பம்பூண்டி | எஸ்.ஆர்.எம் மருத்துவகல்லூரி மருத்துவமனை-பொத்தேரி | 130 |
| 2 | 09.01.2021 | புலியூர் | டி.டி.கே மருத்துவமனை சென்னை | 135 |
| 3 | 19.01.2021 | மேல்மணப்பாக்கம் | டி.டி.கே மருத்துவமனை சென்னை | 48 |
| 4 | 22.01.2021 | விசூர் | டி.டி.கே மருத்துவமனை சென்னை | 60 |
| 5 | 12.02.2021 | ஒரகடம் | டி.டி.கே மருத்துவமனை சென்னை | 40 |
| 6 | 13.02.2021 | எடையூர் | டி.டி.கே மருத்துவமனை சென்னை | 55 |

## அகில உலக புற்றுநோய் தினம்:



10.02.2021 அன்று காலை 11 மணியளவில் சதுரங்கப்பட்டினம் கல்பாக்கத்தில் அகில உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்பட்டது. சென்னை டி.டி.கே மருத்துவமனையின் மருத்துவ ஆலோசகர் திருமதி வள்ளி அவர்கள் கலந்துக்கொண்டு புற்றுநோய் பற்றியும், புகையிலை பயன்படுத்துவதால் உண்டாகும் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இந்நிகழ்விற்கு காரிதாஸ் இந்தியாவின் மண்டல மேலாளர் திரு.ஜான் ஆரோக்கியராஜ் அவர்கள் தலைமை வகித்தார். சட்ராஸ் மாதாக்கோவில் பங்குத்தந்தை அருட்பணி.பேட்ரிக் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி.இ.அந்தோணிராஜ் அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார்கள். இதில் மகளிர் குழு உறுப்பினர்கள் 75 பேர் கலந்துக்கொண்டு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பெற்றனர்

## எழுவோம் இயக்கம் – பணியாளர்களுக்கான புத்தாக்க பயிற்சி

2021 மார்ச் 18, 19 ஆகிய 2 நாட்கள் டி.டி.கே மருத்துவமனை சார்பாக சி.ஆர்.டி.எஸ் பணியாளர்களுக்கு புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு பயிற்சியை மருத்துவ ஆலோசகர்கள் வழங்கினர். விழிப்புணர்வு பயிற்சியில் கலந்துக்கொண்ட பணியாளர்களுக்கு பயிற்சிக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## இயற்கை வேளாண்விதை வழங்குதல்:

இரசாயன உரங்களைக்கொண்டு விளைவிக்கப்பட்ட நெல், காய்கறிகளை உண்பதன் மூலம் புற்றுநோய் எற்படும் அபாயம் உள்ளதை விளக்கியும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் நல்ல ஊட்டசத்துள்ள இயற்கையான முறையில் விளைவிக்கப்பட்ட உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும் என்பதை கருத்தில்கொண்டும் தங்கள் வீடுகளில் உள்ள குறுகிய இடங்களை பயன்படுத்தி இயற்கையான முறையில் வேதிபொருட்கள் இல்லாத இலை, தழைகள், சாணம் ஆகியவற்றை கொண்டு வீட்டுத்தோட்டம் அமைத்து நோய் ஏற்படுவதை தடுக்கவும் எழுவோம் இயக்கத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 கிராமங்களுக்கு இயற்கை முறையில் வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு சிறுகீரை, அரைகீரை, வெண்டை, அவரை, பூசணி, தக்காளி, மிளகாய் போன்ற இயற்கை வேளாண் விதைகள் வழங்கப்பட்டு பயிர்செய்து பயன்பெற்று வருகின்றனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம்: (Community Based Rehabilitation)



மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் இந்த மண்ணில் வாழ உரிமை உண்டு. மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் குறைபாடு உள்ளவர்களும் மற்றவர்களைப் போல வாழ வழிவகை செய்யப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளை அடையாளம் கண்டு அவர்களது வாழ்வு மேம்பட வழிவகை செய்தல், மாற்றுத்திறனாளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான தடைகள் அனைத்தையும் நீக்கி இந்த சமுதாயத்தின் பங்குதாரர்களாக முழுபங்கேற்று சமுதாயத்தோடு அவர்களை இணைப்பதே சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டமாகும்.

இத்திட்டமானது திருப்போரூர் மற்றும் வாலாஜாபாத் ஆகிய 2 ஒன்றியங்களில் உள்ள 18 பஞ்சாயத்துகளில் 85 கிராமங்களில் கடந்த 2 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 21 வகையான மாற்றுத்திறாளிகள் மொத்தம் 936 நபர்கள் இனம் கண்டறியப்பட்டு அவர்களுக்கான முன்னேற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. கீழ்கண்ட 5 கருப்பொருளின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகிறன.

- **சுகாதாரம்** (Health)
- **கல்வி** (Education)
- **வேலைவாய்ப்பு** (Livelihood)
- **சமூகம்** (Social)
- **மேம்பாடு** (Empowerment)



## சுகாதாரம் : (Health)

மாற்றுத்திறனாளிகள் உடற்குறைபாடுகளை கண்டறிந்து மருத்துவம் மற்றும் சுகாதார தேவைகளை நிவர்த்தி செய்து தடையற்ற சூழலை உருவாக்கும்பொருட்டு அரசு மருத்துவதுறையின் உதவியுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான நலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறாக கடந்த ஓராண்டில் மாற்றுத்திறனாளிகளின் சுகாதாரம் மற்றும் நலன் சார்ந்த பணிகள் திட்ட கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டடுள்ளது. அவையாவன:

| வ.எண் | பெயர் | வயது | கிராமம் | தன்மை | பெறப்பட்ட உபகரணங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | சிசுபாபா சாகேப் | 28 | சிறுங்குன்றம் | LD | செயற்கை கை (வலது) |
| 2 | வேலு | 32 | குன்னப்பட்டு | LD | சக்கர நாற்காலி |
| 3 | முனியம்மாள் | 55 | தண்டலம் | LD | சக்கர நாற்காலி |
| 4 | ஜெயஸ்ரீ | 40 | ஆலத்தூர் | LD | காலணிகள் |
| 5 | பிரகாஷ்ராஜ் | 15 | ஆலத்தூர் | LD | செயற்கை கை (வலது) |
| 6 | சேகர் | 58 | ஆம்பாக்கம் | LD | மூன்று சக்கரவண்டி |
| 7 | சுகன்யா | 12 | ஆம்பாக்கம் | LD | மூன்று சக்கரவண்டி |
| 8 | மீனாட்சி | 37 | வெண்பாக்கம் | LD | மூன்று சக்கரவண்டி |
| 9 | ரகுமான் | 32 | ஆம்பாக்கம் | LD | மூன்று சக்கரவண்டி (ம)<br>ஊன்றுகோல் |
| 10 | குப்பம்மாள் | 55 | ஆம்பாக்கம் | LD | ஊன்றுகோல் |
| 11 | செந்தமிழரசன் | 9 | ஆம்பாக்கம் | LD | காலணிகள் |
| 12 | சோனா | 20 | ஆம்பாக்கம் | HI | காதொலிக்கருவி |
| 13 | தேவகி | 32 | ஆம்பாக்கம் | HI | காதொலிக்கருவி |
| 14 | ரீனா | 30 | ஆம்பாக்கம் | | காதொலிக்கருவி |
| 15 | பிரதிஷ் | 6 | வையாவூர் | MR | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி & கிட் பாக்ஸ் |

| வ.எண் | பெயர் | வயது | கிராமம் | தன்மை | பெறப்பட்ட உபகரணங்கள் |
|---|---|---|---|---|---|
| 16 | பிரித்தி | 6 | வையாவூர் | MR | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி & கிட் பாக்ஸ் |
| 17 | அரிதா | 6 | வையாவூர் | MR | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி & கிட் பாக்ஸ் |
| 18 | மீனா | 50 | வையாவூர் | HI | காதொலிக்கருவி |
| 19 | துலுக்கானம் | 49 | வையாவூர் | HI | காதொலிக்கருவி |
| 20 | கோதண்டன் | 60 | வையாவூர் | HI | காதொலிக்கருவி |
| 21 | கன்னியப்பன் | 65 | உள்ளாவூர் | LD | ஊன்றுகோல், செயற்கை கால் |
| 22 | மண்ணு | 50 | உள்ளாவூர் | LD | ஊன்றுகோல், மூன்று சக்கரவண்டி |
| 23 | சேகர் | 43 | உள்ளாவூர் | LD | காதொலிக்கருவி, ஊன்றுகோல் |
| 24 | மனோகரன் | 40 | உள்ளாவூர் | HI | காதொலிக்கருவி |
| 25 | கீர்த்தனா | 14 | வெங்குடி | MR &CP | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி |
| 26 | தினேஷ்குமார் | 12 | வெங்குடி | MR &CP | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி |
| 27 | செல்வம் | 41 | வெங்குடி | LD | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி |
| 28 | பிரவீன் | 21 | சிறுவாக்கம் | LD | செயற்கை கை (ம) கால் |
| 29 | சரவணன் | 23 | சிறுவாக்கம் | LD | செயற்கை கை |
| 30 | டில்லிபாபு | 14 | சிறுவாக்கம் | LD | மூன்று சக்கரவண்டி |
| 31 | நந்தகுமார் | 41 | பரந்தூர் | Deaf | காதொலிக்கருவி |
| 32 | தேவேந்திரன் | 28 | பரந்தூர் | LD | சக்கர நாற்காலி |
| 33 | சாய்சுவாதி | 5 | புதுகாலனி | MR | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி & கிட் பாக்ஸ் |
| 34 | தசேன் | 22 | கட்டவாக்கம் | Deaf | காதொலிக்கருவி |
| 35 | ஏழுமலை | 42 | கட்டவாக்கம் | Deaf | காதொலிக்கருவி |
| 36 | குள்ளப்பட்டு | 60 | தென்னேரி | HI | காதொலிக்கருவி |
| 37 | சின்னதுரை | 42 | தென்னேரி | HI | காதொலிக்கருவி |
| 38 | ரீட்டா | 28 | தென்னேரி | HI | காதொலிக்கருவி |
| 39 | தமிழ்செல்வன் | 21 | தென்னேரி | HI | காதொலிக்கருவி |
| 40 | தேவன் | 40 | தென்னேரி | LD | மூன்று சக்கரவண்டி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 41 | ரவி | 36 | தென்னேரி | LD | மூன்று சக்கரவண்டி |
| 42 | கலைசெல்வி | 38 | தென்னேரி | LD | மூன்று சக்கரவண்டி |
| 43 | சத்யா | 31 | தென்னேரி | LD | மூன்று சக்கரவண்டி |
| 44 | வனத்து சின்னப்பர் | 48 | தென்னேரி | LD | ஊன்றுகோல் |
| 45 | சாந்தகுமார் | 28 | தென்னேரி | LD | ஊன்றுகோல் |

- **மாற்றுத்திறனாளிகளுக்கான அடையான அட்டை (ம) மருத்துவ சான்றிதழ் பெற்றவர்கள் - 160**
- **தேசிய அடையாள அட்டை பெற்றவர்கள் - 164**
- **பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான குழுக்கள் -13**
- **தீவிர மனவளர்ச்சி குறைபாடுடையவர்களுக்கான அன்றாட வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் - 22**
- **பேச்சு மற்றும் உடற்பயிற்சி பெற்றவர்கள் - 2**

கொரோனா தொற்று பரவல் காரணமாக மருத்துவமனை மற்றும் தொடர்சிகிச்சைக்கு செல்ல முடியாத நிலையில் மருத்துவமனைக்கு செல்ல இயலாதவர்களுக்கான ஆலோசனைகள், மருந்து மாத்திரைகள் பெற்று தருதல், சத்தான உணவு உட்கொள்ளுதல், அடிக்கடி கை கழுவுதல், முகக்கவசம் அணிதல், கிருமி நாசினி பயன்படுத்துதல், வெளியில் செல்வதை தவிர்த்தல், போன்ற சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு அலைபேசி வாயிலாக தொடர்ந்து வழங்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் கண்காணிக்கப்பட்டு வந்தனர்.

கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு மாற்றுத்திறனாளிகளின் நலனை கருத்தில்கொண்டு ஊரடங்கு காலத்தில் அவர்களுக்கு தேவையான முகக்கவசம், கிருமி நாசினி அவசரகால உணவு மற்றும் ரூ.10,000.00 மதிப்புள்ள மளிகை பொருட்கள் ஆகியவை அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் அரசு மற்றும் பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக பெறப்பட்டு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நாட்களில் 6 கட்டங்களாக தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது.

## கல்வி:

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 64.8 சதவீதம் பேர் கல்வி கற்றவர்களாக உள்ள நிலையில் வெறும் 49 சதம் மாற்றுத்திறனாளிகளே கல்வி கற்றவர்களாக உள்ளனர். 44 சதவிகிதம் பள்ளிகள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. பார்வையற்றோருக்கான பிரெயில் வடிவிலான ஆவணங்களும், காதுகேளாத வாய்பேசாதவர்களுக்கான சைகை மொழிப்பெயர்பாளர்களும், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான அரசு பள்ளிகள் மற்றும் சிறப்பாசிரியர்கள் போதிய அளவில் இல்லாததும் மாற்றுத்திறனாளிகளின் கல்விக்கு தடையாக உள்ளது.

கடந்த ஆண்டு முதல் உலகெங்கிலும் பரவி பெருமளவில் உயிர்சேதத்தை ஏற்படுத்திய கொரோனா பரவல் காரணமாக அனைத்து பள்ளிகளும் மூடப்பட்டது. பள்ளி செல்லும் குழந்தைகள் அனைவரும் அலைபேசி வாயிலாக ஆன்லைன் வகுப்புகள் மற்றும் கல்வித்தொலைக்காட்சி வாயிலாக மட்டுமே கல்வி கற்றனர். அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் கல்வி தொடர்பான சந்தேகங்கள் அலைபேசி வாயிலாக பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு சி.பி.ஆர் திட்ட பணியாளர்களால் வழங்கப்பட்டது. மாற்றுத்திறனாளி குழந்தைகள் இருவர் புதியதாக அரசு பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள்



## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள்



## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுடன்







## வேலைவாய்ப்பு:

கடந்த ஆண்டில் கொரோனா பெருந்தொற்று காரணமாக வேலைவாய்ப்பில்லாமல் அன்றாட தேவைகளைக்கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாத மாற்றுத்திறனாளிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளான நிலையில் உள்ளூர் வளங்களை கொண்டு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் பணிகளை பணியாளர்கள் திட்டத்தின் வழியாக முன்னெடுத்து சென்றனர். தேசிய மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மையத்தின் புள்ளிவிவரத்தின்படி அரசு வேலைவாய்ப்பில் 0.5 விழுக்காடும் தேசிய அளவில் 0.4 விழுக்காடும் தான் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

இச்சூழலில் வேலைவாய்ப்பில்லாமல் தவிக்கும் மாற்றுத்திறனாளிகளை இனம்கண்டு அவர்களுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் அரசின் மூலம் வழங்கப்படும் அனைத்து திட்டங்களும் மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்து அவர்களும் இச்சமுதாயத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக வாழ சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் வழியாக பல்வேறு அரசு நலத்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கடந்த ஓராண்டில் வேலைவாய்ப்பு திட்டத்தில் பயனடைந்தவர்கள் விவரம் பின்வருமாறு:**

- **மாற்றுத்திறனாளி உதவித்தொகை பெற்றவர்கள் - 83 நபர்கள்**
- **இலவச பேருந்து பயண சலுகை பெற்றவர்கள் -10 நபர்கள்**
- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம் - 51 நபர்கள்**
- **தனிநபர் கழிவறை திட்டம் பெற்றவர்கள் - 26 நபர்கள்**
- **வேலைவாய்ப்புக்காக பதிவு செய்தவர்கள் -2 நபர்கள்**
- **தொழில்செய்வதற்கான வட்டியில்லா கடன் பெற்றோர் (PLF வழியாக )- 47 நபர்கள் (ரூ.2000 முதல் 15000 வரை)**
- **பசுமை வீடுகட்டும் திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர்கள் - 9 நபர்கள்**
- **காஞ்சி கூட்டுறவு வங்கி மூலம் தொழில் தொடங்குவதற்கான கடன் பெற்றுள்ளவர்கள் -6 நபர்கள் (ரூ50,000)**
- **ஆடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்கள் - 6 நபர்கள் (ரூ.10,000)**

## சமூகம்-(Social):

மாற்றுத்திறனாளிகளும் சமூகத்தின் உறுப்பினர்களே. பல்வேறு குறைபாடுகளால் இச்சமூகம் அவர்களை ஒதுக்கி வைத்தாலும் குடும்பம், உறவினர்கள் அவர்கள் வாழும் சமூகம், அரசு நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகளின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கு தேவையான உதவிகள், திட்டங்கள் ஆகியவற்றை பெறுவதற்கு துணைபுரிதல் வேண்டும். அவ்வாறான சூழலை உருவாக்குவதால் மாற்றுத்திறனாளிகள் தடையற்ற வாழ்வை நோக்கி பயணிக்க இச்சமூகம் உறுதுணையாக இருக்கும். இத்திட்டத்தின் மூலம் விழிப்புணர்வுபெற்று மாற்றுத்திறனாளிகளுக்கான சட்டம் குறித்த தெளிவு பெற்று கிராம சபை கூட்டங்களில் பங்கெடுத்தல், கிராம விழாக்கள், குடும்ப விழாக்கள் ஆகியவற்றில் கலந்துக்கொண்டு சமுதாய நிகழ்வுகளில் தங்களையும் இணைத்துக்கொள்கின்றனர்.

## அகில உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2020

03.12.2020 அன்று திருப்போரூர் மற்றும் வாலாஜாபாத் ஆகிய ஒன்றியங்களில் அகில உலக மாற்றுத்திறனாளிகள் தினம் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை ஊக்குவிக்கும்வண்ணம் அவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் போர்வை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள், சிறப்பு விருந்தினர்கள், அரசு அலுவலர்கள், ஒன்றிய பொறுப்பாளர்கள் என 300 நபர்கள் பங்கேற்று மாற்றுத்திறனாளிகளை ஊக்குவித்தனர்.

## மேம்பாடு -(Empowernment):

மாற்றுத்திறனாளிகள் தங்கள் தேவைகளை தாங்களே நிறைவேற்றிக்கொள்ளவும், அவர்களுக்கான உரிமைகள் மற்றும் திட்டங்களை பெறுவதற்கு ஏதுவாகவும் குழுக்களின் மூலம் அரசின் வழியாக வழங்கப்படும் திட்டங்கள், உரிமை சார்ந்த செயல்பாடுகளை முன்னெடுக்கவும் மாற்றுத்திறனாளிகள் குழுக்களாக இணைந்துள்ளனர். கடந்த ஓராண்டில் தொடங்கப்பட்ட புதிய மாற்றுத்திறனாளிகள் குழுக்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | குழுவின் பெயர் | கிராமம் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புதிய விடியல் | ஆம்பாக்கம் | 7 |
| 2 | ஸ்ரீகாந்தி | தொள்ளாழி | 8 |
| 3 | பசுமை | ஆமூர் | 9 |
| 4 | வெண்ணிலா | பெருந்தண்டலம் | 5 |
| 5 | நிலா மாற்றுத்திறனாளிகள் குழு | பாரதிநகர் | 8 |
| 6 | சாதிக்க பிறந்தவர்கள் | பாரதிநகர் | 7 |
| 7 | அன்னை தெரசா | பையனூர் | 8 |
| 8 | வெண்மை | கூத்தவாக்கம் | 6 |
| 9 | பசுந்தளிர் | தர்மநாயக்கன் பட்டறை | 9 |
| 10 | அப்துல்கலாம் | வெங்குடி | 8 |
| 11 | ரோஜா | உள்ளாவூர் | 10 |
| 12 | புதுமை | புதுநகர் | 5 |
| 13 | பசுமை | தென்னேரி | 9 |
| 14 | அப்துல்கலாம் | சிறுவாக்கம் | 13 |
| 15 | வெற்றிவீரர்கள் | பரந்தூர் | 11 |
| **மொத்தம் 15 குழுக்கள்** | | | **123** |

# நாபின்ஸ் நுண்கடன் திட்டம் (Nabfins)

நாபின்ஸ் நுண்கடன் திட்டமானது கடந்த 4 ஆண்டுகாலமாக நபார்டு உலக வங்கியின் மூலம் நிதிஉதவி பெற்று கிராமங்களில் உள்ள ஏழை, எளிய மகளிர் குழுக்களுக்கு வருமானம் பெருக்கும் நோக்கத்திற்காக இக்கடனுதவித் தொகையானது வழங்கப்பட்டு வந்தது.

தற்போது மகளிர் குழுக்களில் சேர இயலாத, ஆர்வம் உள்ள நபர்களை கண்டறிந்து கூட்டு பொறுப்பு குழுவாக ஒன்றிணைத்து (Joint Liability Group) அவர்கள் விரும்பும் தொழில் செய்ய (விவசாயம், கறவைமாடு வளர்ப்பு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு) 4 முதல் 8 நபர்களை கூட்டாக சேர்த்து கடன்தொகையானது வழங்கப்பட்டு வருகிறது. நாபின்ஸ் நுண்கடன் திட்டத்தில் பெறப்பட்ட முதல் கடனுதவித்தொகையானது கட்டி முடிக்கப்பட்டவுடன் கூட்டு பொறுப்பு நபர்களை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி இயங்கி வரும் மகளிர் சுய உதவிக்குழுக்களாக உருவாக்கப்படுகின்றனர். இவ்வாறு கடந்த ஓராண்டில் நாபின்ஸ் நுண்கடன் திட்டத்தில் ஒன்றியம் வாரியாக வழங்கப்பட்டுள்ள கடன்தொகை விவரம்

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | குழு எண்ணிக்கை | தொகை | JLG (கூட்டு பொறுப்பு குழு) | தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 1 | 5,80,000 | 17 | 32,30,000 | 38,10,000.00 |
| 2 | அச்சிறுப்பாக்கம் | 13 | 72,75,000 | 4 | 9,20,000 | 81,95,000.00 |
| 3 | மதுராந்தகம் | 5 | 29,20,000 | - | - | 29,20,000.00 |
| 4 | லத்தூர் | 4 | 19,50,000 | - | - | 19,50,000.00 |
| 5 | திருக்கழுக்குன்றம் | 11 | 47,75,000 | 1 | 2,00,000 | 49,75,000.00 |
| 6 | காட்டாங்கொளத்தூர் | 6 | 31,40,000 | 11 | 17,20,000 | 50,20,000.00 |
| 7 | காஞ்சிபுரம் | 10 | 68,60,000 | 3 | 4,80,000 | 73,40,000.00 |
| 8 | வாலாஜாபாத் | 9 | 41,00,000 | 3 | 7,20,000 | 48,20,000.00 |
| 9 | திருப்போரூர் | 13 | 56,50,000 | 7 | 13,60,000 | 69,65,000.00 |
| மொத்தம் | | 72 | 37,20,5000.00 | 46 | 86,30,000.00 | 4,58,35,000.00 |





# நாபின்ஸ் நுண்கடன் திட்டம்
# (Nabfins)











# பெண்கள் கூட்டமைப்பு

## (Women Federation)

தமிழக சமூகப்பணி மையம் **(Tasoss)** வழிகாட்டுதலுடன் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள 10 ஒன்றியங்களில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய பெண்களை ஒன்றிணைத்து கூட்டமைப்பாக செயல்பட்டு வருகின்றனர். இவ்வியக்கம் பெண்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் மற்றும் உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்திற்காக துவங்கப்பட்டு 600 க்கும் மேற்பட்ட குழுக்களுடன் 7787 உறுப்பினர்களைக்கொண்டு செயல்பட்டு வருகின்றது.

### இயக்கத்தின் நோக்கம்:

- சமுதாயத்தில் வறுமை கோட்டிற்கு கீழுள்ள பின்தங்கிய ஒடுக்கப்பட்ட பெண்கள் ஒன்றுபட்டு சமூகப் பொருளாதார, அரசியல், கல்வி, கலாச்சாரம் மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் முழு ஈடுபாடு கொண்டு வாழ்வில் முன்னேற துணைபுரிதல்.
- பெண்களிடையே கூட்டமைப்பின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பெண்களுக்கான உரிமைகளை பெறவும், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- சமூக பிரச்சினைகள், அடிப்படை காரணங்களை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்காக வழிவகுத்தல்.
- அரசு அதிகாரிகளுடன் சமூக உறவை ஏற்படுத்தி பெண்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் சலுகைகளையும் அரசிடமிருந்து பெற்றுத் தருதல்.
- சமூகத்தில் நலிவுற்ற பெண்களின் நிலையை உயர்த்தவும், அரசியலிலும், நிர்வாக பொறுப்புகளில் பெண்கள் பங்கெடுக்கவும் கூட்டமைப்பு உறுப்பினர்களை வலுப்படுத்துதல்.
- பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஒத்த சிந்தனையுள்ள பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.

### குறிக்கோள்:

- தலைமைத்துவ பண்பு பயிற்சிகள் வழங்குதல்.
- சமூகத்தில் பெண்கள் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், குடும்பநலம், உரிமைகள், முறைசாராக் கல்வி பற்றிய விழிப்புணர்வு, அரசியலில் பங்கேற்றல்.
- மகளிருக்கு சிறுதொழில் வேலைவாய்பிற்கான பயிற்சி அளித்தல்.
- சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்று செயல்படுத்துதல்.
- இயக்கத்தின் குறிக்கோள்களை அடைய அதன் நிர்வாகக் குழு காலத்தின் தேவைக்கேற்ப வேறு பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுதல்.
- மகளிருக்கு சயவேலைவாய்ப்புக்கான முதலீட்டுத் தொகைக்கான கடனுதவி பெறுதல்.

### இயக்கத்தின் செயல்பாடுகள்:

செங்கல்பட்டு கிராமப்புற பெண்கள் முன்னேற இயக்க மாவட்ட கூட்டமைப்பு கூட்டம் நடத்தப்பட்டு புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| இயக்க தலைவர் | : | திருமதி.**கமலா மேரி** - மல்லிகாபுரம் |
| து.தலைவர் | : | திருமதி.**கன்னிமேரி** - கே.கே.புதூர் |
| செயலர் | : | திருமதி.**ஜெயசீலி** - ஆர்.என் கண்டிகை |
| பொருளர் | : | திருமதி. **சகுந்தலா** - காஞ்சிபுரம் |



# டாசோஸ் வழியாக நிவாரண உதவிகள்













கொரோனா பெருந்தொற்றின் காரணமாக அனைத்து பள்ளிகளிலும் தற்போது ஆன்லைன் வகுப்புகள் எடுக்கப்படுகின்ற நிலையில் செங்கல்பட்டு மாவட்டம் பாலூர் ஊராட்சி நெ.66 மேல்மணப்பாக்கம் கிராமத்தில் உள்ள 9 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் (வயது 19). தனியார் பள்ளியில் ஆன்லைன் வகுப்புக்கு சென்ற மாணவனை தனியார் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினார். மாணவனின் நிலையை அறிந்த பெற்றோர் பெண்கள் கூட்டமைப்பு சார்பாக பாலூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதின் பேரில் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## அகில உலக பெண்கள் தினவிழா: 2021

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் மற்றும் செங்கல்பட்டு கிராமப்புற பெண்கள் முன்னேற்ற இயக்கம் இணைந்து 2021 ஆம் ஆண்டிற்கான அகில உலக பெண்கள் நாள் 08.03.2021 அன்று சி.ஆர்.டி.எஸ் அலுவலகத்தில் சிறப்பிக்கப்பட்டது. ‘சவால்களை சந்திக்க” எனும் மையத்தலைப்பை அடிப்படையாகக்கொண்டு இன்றைய சமூகத்தில் பெண்களின் நிலை, பெண்களுக்கான சவால்கள், பிரச்சினைகள், எதிர்கொள்ளும் விதம் ஆகியவற்றை குறித்து சிறப்புரை ஆற்றப்பட்டது. இந்நிகழ்வில் செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயரின் பொதுபதில்குரு பேரருட்பணி.**ஞா. பாக்கிய ரெஜிஸ்**, திருமதி. **ஜோஸ்பின்** வழக்கறிஞர், திருமதி.**ஷாலினி** டி.டி.கே மருத்துவமனை, திரு.**ஜான் ஆரோக்கியராஜ்** காரிதாஸ் இந்தியா, அருட்சகோதரி. **நம்பிக்கை மேரி** தூய மரியன்னை பள்ளி ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். நிறுவன இயக்குநர் அருட்பணி.**இ. அந்தோணிராஜ்** அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார். மகளிர் குழு உறுப்பினர்கள், கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், பணியாளர்கள் என மொத்தம் 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டு அகில உலக பெண்கள் நாளை சிறப்பித்தனர்.




## புதிய குழுக்கள்:

மகளிர் குழுக்கள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்டு ஆண்டுதோறும் புதிய மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றை மேம்படுத்துவதற்கான பல்வேறு பயிற்சிகள் நடத்தப்பட்டு சிறப்பாக குழுக்கள் இயங்கி வருகின்றன. இவ்வாறு கடந்த ஓராண்டில் புதியதாக துவங்கப்பட்ட குழுக்களின் விவரம்:

| வ.எண் | ஒன்றியம் | குழுக்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காட்டாங்கொளத்தூர் | 5 | 68 |
| 2 | திருப்போரூர் | 8 | 101 |
| 3 | இலத்தூர் | 2 | 24 |
| 4 | திருக்கழுக்குன்றம் | 6 | 78 |
| 5 | காஞ்சிபுரம் | 4 | 38 |
| 6 | வாலாஜாபாத் | 3 | 36 |
| 7 | அச்சிறுப்பாக்கம் | 5 | 69 |
| 8 | மதுராந்தகம் | 4 | 50 |
| 9 | சித்தாமூர் | 4 | 67 |
| 10 | உத்திரமேரூர் | 4 | 55 |
| மொத்தம் | | 45 | 586 |

**ஒன்றியம் வாரியாக சி.ஆர்.டி.எஸ் நிறுவன வழிகாட்டுதலின் கீழ் இயங்கி வரும் குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழு எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | காட்டாங்குளத்தூர் | 11 | 11 | 62 | 744 |
| 2 | திருப்போரூர் | 10 | 13 | 53 | 663 |
| 3 | இலத்தூர் | 10 | 12 | 50 | 635 |
| 4 | திருக்கழுக்குன்றம் | 14 | 23 | 64 | 861 |
| 5 | சித்தாமூர் | 8 | 8 | 12 | 172 |
| 6 | மதுராந்தகம் | 4 | 5 | 17 | 269 |
| 7 | அச்சிறுப்பாக்கம் | 14 | 21 | 60 | 916 |
| 8 | வாலாஜாபாத் | 5 | 17 | 50 | 672 |
| 9 | காஞ்சிபுரம் | 10 | 13 | 52 | 678 |
| 10 | உத்திரமேரூர் | 16 | 26 | 82 | 1150 |
| 11 | கடற்கரை பகுதி | 7 | 14 | 25 | 320 |
| | மொத்தம் | 109 | 163 | 527 | 7080 |

**சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் வாயிலாக கடந்த ஓராண்டில் வங்கியின் மூலம் பெற்றுத்தரப்பட்ட நேரடிக்கடன் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | கிராமம் | குழுக்கள் | உறுப்பினர் | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம் | சட்ராஸ் மாதாகோவில் | 5 | 65 | 45,00,000.00 |
| 2 | திருக்கழுக்குன்றம் | புதுப்பட்டினம் | 1 | 14 | 8,40,000.00 |
| 3 | திருக்கழுக்குன்றம் | மெய்யூர் குப்பம் | 1 | 14 | 5,40,000.00 |
| 4 | திருக்கழுக்குன்றம் | மெய்யூர் குப்பம் | 1 | 10 | 4,00,000.00 |
| 5 | மதுராந்தகம் | மலைப்பாளையம் | 1 | 20 | 5,00,000.00 |
| 6 | மதுராந்தகம் | கே.கே.புதூர் | 1 | 16 | 9,00,000.00 |
| 7 | சித்தாமூர் | தண்டலம் | 1 | 12 | 3,60,000.00 |
| 8 | சித்தாமூர் | கீழ்மருவத்தூர் | 1 | 11 | 5,50,000.00 |
| 9 | சித்தாமூர் | தேன்பாக்கம் | 1 | 12 | 6,00,000.00 |
| 10 | இலத்தூர் | பவுஞ்சூர் | 1 | 12 | 5,00,000.00 |
| 11 | இலத்தூர் | விழுதமங்களம் | 2 | 24 | 10,00,000.00 |
| 12 | திருக்கழுக்குன்றம் | வீரகுப்பம் | 1 | 15 | 3,00,000.00 |
| 13 | திருக்கழுக்குன்றம் | எடையூர் | 4 | 56 | 12,00,000.00 |
| 14 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | 2 | 30 | 5,00,000.00 |
| 15 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | 3 | 45 | 9,00,000.00 |
| 16 | திருக்கழுக்குன்றம் | மணப்பாக்கம் | 3 | 43 | 6,00,000.00 |
| 17 | திருக்கழுக்குன்றம் | உதயம்பாக்கம் | 7 | 96 | 15,00,000.00 |
| 18 | அச்சிறுப்பாக்கம் | மாத்தூர் | 1 | 13 | 6,50,000.00 |
| 19 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | 2 | 24 | 5,80,000.00 |
| 20 | அச்சிறுப்பாக்கம் | எலப்பாக்கம் | 3 | 54 | 18,20,000.00 |
| 21 | வாலாஜாபாத் | ஏனாத்தூர் | 2 | 24 | 12,00,000.00 |
| 22 | வாலாஜாபாத் | கௌரியம்மன்பேட்டை | 4 | 48 | 26,00,000.00 |
| 23 | வாலாஜாபாத் | வாரணவாசி | 4 | 46 | 23,00,000.00 |
| 24 | உத்திரமேரூர் | பூந்தண்டலம் | 5 | 62 | 25,00,000.00 |
| 25 | உத்திரமேரூர் | குழம்பரகோயில் | 1 | 20 | 6,00,000.00 |
| | மொத்தம் | | 58 | 786 | 2,79,80,000.00 |

# சிறப்பு செயல்பாடுகள்:

## கல்லூரி மாணவர்களின் களப்பணி பங்கேற்பு

சென்னை இலயோலா கல்லூரி, சென்னை கிறித்தவ கல்லூரி, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி மற்றும் குருநானக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் இருந்து சமூகப் பணி படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு களப்பணி அனுபவத்திற்காக ஆண்டுதோறும் வருவதுண்டு. இந்த ஆண்டு 4 மாணவ மாணவிகள் களப்பணி அனுபவத்திற்காக வந்திருந்து பணியாளர்களுடன் இணைந்து சமூகப்பணியை ஆர்வத்தோடு கற்றுக்கொண்டனர்.

### மருத்துவ முகாம்

சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் எஸ்.ஆர்.எம் மருத்துவமனையோடு இணைந்து கிராமப்புற மக்களின் நலனில் அக்கறைக் கொண்டு அவர்களுக்கான இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு நோயாளிகளை இனம்கண்டு இலவச மருத்துவம் வழங்கி வருகிறது. இம்மருத்துவ முகாம்களின் வழியாக கீழ்கண்ட மருத்துவப் பிரிவுகளின் கீழ் மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

- பொது மருத்துவம்
- கண் மருத்துவம்
- தோல் மருத்துவம்
- குழந்தை மருத்துவம்
- பல் மருத்துவம்
- காது, மூக்கு தொண்டை மருத்துவம்
- எலும்பு முறிவு மற்றும் இதயநோய் மருத்துவம்
- பொது மருத்துவம்




உத்திரமேரூர் மற்றும் வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள கருவேப்பம்பூண்டி மற்றும் சிறுவாக்கம் கிராமங்களில் உள்ள 206 நபர்களுக்கு இதுவரை கடந்த ஓராண்டில் இலவச மருத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

### குடிநோய் விழிப்புணர்வு பயிற்சி

சி.ஆர்.டி.எஸ் நிறுவனம், சென்னை அடையாறில் உள்ள டி.டி.கே மருத்துவமனையுடன் இணைந்து கிராமப்புற மக்களுக்கான போதை மற்றும் குடிநோய் விழிப்புணர்வு குறித்த பயிற்சியை வழங்கி குடிநோயினால் உண்டாகும் தீமைகள் மற்றும் போதை பழக்கத்திலிருந்து மீள்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டது.





கடந்த ஓராண்டில் கீழ்கண்ட கிராமங்களில் போதை மற்றும் குடிநோய் குறித்த விழிப்புணர்வு பயிற்சிகளானது வழங்கப்பட்டுள்ளன.

| வ.எண் | தேதி | ஒன்றியம் | கிராமம் | பங்கேற்றோர் எண்ணிக்கை | விரிவுரையாளர் |
|---|---|---|---|---|---|
| 1 | 12.02.2020 | திருப்போரூர் | கழனிப்பாக்கம் | 45 | திரு.முகேஷ் |
| 2 | 12.02.2020 | திருப்போரூர் | ஓரகடம் - இருளர் | 40 | திரு.முரளிதரன் |
| 3 | 12.02.2020 | திருப்போரூர் | ஓரகடம் | 40 | திரு.முரளிதரன் |
| 4 | 17.12.2020 | திருப்போரூர் | கரும்பாக்கம் | 40 | திரு.சாலமன் |
| 5 | 09.01.2021 | திருக்கழுக்குன்றம் | புலியூர் | 125 | திரு.முரளிதரன் |
| 6 | 19.01.2021 | காட்டாங்குளத்தூர் | மேல்மணப்பாக்கம் | 80 | திருமதி.வள்ளி |
| 7 | 22.01.2021 | உத்திரமேரூர் | விசூர் | 60 | திருமதி.ஷாலினி |
| 8 | 10.02.2021 | திருக்கழுக்குன்றம் | சட்ராஸ் | 85 | திருமதி.வள்ளி |
| 9 | 13.02.2021 | திருக்கழுக்குன்றம் | எடையூர் | 60 | திரு.முரளிதரன் |
| மொத்தம் | | | | 575 | |

# 10. சி.ஆர்.டி.எஸ் – கொரோனா நிவாரணப் பணிகள்

இன்றளவும் உலகையே அச்சுறுத்தி பலக் கோடிக்கணக்கான உயிர்களை பலிவாங்கிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் வாரத்தில் சீனாவின் வுஹான் நகரில் தோன்றி அனைத்து நாடுகளுக்கும் பரவியது. நோய்த்தொற்று பரவியதை தொடர்ந்து உலக நாடுகள் அனைத்தும் பொதுமுடக்கத்தை அறிவித்தன. கடந்த ஓராண்டில் இந்தியாவில் 8 கட்டங்களாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. கோவிட் தாக்கத்தை பொருத்து மாநிலங்கள் வாரியாக சில தளர்வுகளுடன் கூடிய பொது முடக்கங்கள் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் கொரோனா பெருந்தொற்று பயத்தின் காரணமாக அரசு, தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டன. பல ஆயிரக்கணக்கான மக்கள் வேலையிழப்புக்குத் தள்ளப்பட்டனர்.

இச்சூழ்நிலையில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களை நோய்தாக்கம் அதிகம் உள்ள மாவட்டங்களாக அரசு அறிவித்தது. ஆகவே தளர்வுகளில்லா ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து வறுமை நிலைக்கு தள்ளப்பட்டனர். சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் பணியாளர்கள் வழியாக கொரோனா பாதிப்பின் நிலைகளை கண்டறிந்து, கொரோனா பெருந்தொற்று குறித்த விழிப்புணர்வை அலைபேசி வழியாக தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுத்துக்கொண்டிருந்தது. இதுபோன்ற அவசரகால உதவிகளுக்காக சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் நிவாரண பொருட்கள் மற்றும் உணவு பொட்டலங்கள் வழங்குவதற்காக நிவாரணப் பொருட்கள் பணியாளர்களால் அருகிலுள்ள மொத்தவிலைக்கடைகளில் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து பொருட்களும் பாக்கெட் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்க தயார் நிலையில் வைக்கப்பட்டது.

.



பின்பு அவர்களுக்கு தேவையான முகக்கவசம், இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட கிருமிநாசினி, சோப்பு, கையுறைகள், குழந்தைகளுக்கான சத்துமாவு, காய்கறிகள், மளிகை பொட்டலங்கள், அரிசி, உணவு பொட்டலங்கள் நிதி உதவி ஆகியவை உள்ளூர் தன்னார்வ தொண்டர்கள், மற்றும் உபகாரிகள் வழியாக உதவிகளாகப் பெறப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களான குழந்தைகள், முதியோர்கள், ஆதவற்றவர்கள், விதவைகள், புலம்பெயர்ந்தோர், திருநங்கைகள், நாடோடிகள், துப்புரவுப் பணியாளர்கள், மீனவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், தொழுநோயாளிகள், சலவைத் தொழிலாளர்கள், நரிக்குறவர்கள், பைரா இனமக்கள், இருளர், மகளிர் குழு உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டது.

## மாவட்டங்கள் வாரியாக சி.ஆர்.டி.எஸ்-ன் நிவாரண உதவிகள் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | விபரம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **காஞ்சிபுரம் மாவட்டம்: மளிகைப்பொருட்கள்** | |
| 1 | ஈழத்தமிழர்கள் | 100 |
| 2 | பட்டியலினத்தவர்கள் | 715 |
| 3 | பழங்குடியினர் | 625 |
| 4 | தொழுநோயாளிகள் | 5 |
| 5 | மாற்றுத்திறனாளிகள் | 845 |
| 6 | சலவைத்தொழிலாளர்கள் | 400 |
| 7 | புலம்பெயர்ந்தவர்கள் | 600 |
| 8 | கோல்பிங் உறுப்பினர்கள் | 15 |
| | மொத்தம் | **3305 குடும்பங்கள்** |
| 9 | முகக்கவசம் | 500 |
| 10 | சானிடைசர் | 50 |
| 11 | கையுறைகள் | 35 |
| 12 | நிதிஉதவி | 8 |
| | **செங்கல்பட்டு மாவட்டம் : மளிகைப்பொருட்கள் மற்றும் உணவு பொட்டலங்கள்** | |
| 1 | பட்டியலினத்தவர் | 405 (205 - மதிய உணவு) |
| 2 | பழங்குடியினர் | 651 (284 - மதிய உணவு) |
| 3 | பைரா மக்கள் | 200 |
| 4 | மாற்றுத்திறனாளிகள் | 1110 |
| 5 | சலவைத்தொழிலாளர்கள் | 100 |
| 6 | புலம்பெயர்ந்தவர்கள் | 200 (உணவு) |
| 7 | கோல்பிங் உறுப்பினர்கள் | 85 |
| 8 | திருநங்கைகள் | 100 |
| 9 | நாடோடிகள் | 168 (239 - மதிய உணவு) |
| 10 | துப்புரவுப் பணியாளர்கள் | 100 |
| 11 | மீனவர்கள் | 200 |
| 12 | கர்ப்பிணிப்பெண்கள் | 10 |
| 13 | தெருவோர ஆதரவற்றோர் | 150 (மதிய உணவு) |
| | **மொத்தம்** | **4479 குடும்பங்கள்** |
| 14 | முகக்கவசம் | 950 நபர்கள் |
| 15 | சானிடைசர் | 75 நபர்கள |
| 16 | கையுறைகள் | 100 நபர்கள் |
| 17 | நிதி உதவி | 18 குடும்பங்கள் |
| 18 | தார்பாய்கள் | 114 குடும்பங்கள் |
| 19 | சேலைகள், வேட்டிகள், லுங்கிகள் | 114 குடும்பங்கள் |

### பெருந்தொற்று ஊரடங்கில் செய்யப்பட்ட உதவிகள் அனைத்தும்

- தனி நபரின் (தன்னார்வலர்கள்) மூலமாகவும்
- தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும்
- அரசு நியாய விலைக்கடைகள் மூலமாகவும்
- அரசு அவசர உதவி (ஹெல்ப் லைன்) மூலமாகவும்
- பதிவு செய்யப்பட்டு பெற்றுக்கொடுக்கப்பட்டன.





### கொரோனா கால சி.ஆர்.டி.எஸ் -ன் பணிகள்:

- விழிப்புணர்வு ஏற்படுத்துதல் (அலைபேசி வழியாக)
- கிராமப்புற மருத்துவர், செவிலியர்,சுகாதாரப்பணியாளர்களுக்கான சேவை
- ஆற்றுபடுத்துதல் சேவை
- சட்டசிக்கல் மற்றும் மீட்பு பணிகள்

### விழிப்புணர்வு பணிகள்:

சி.ஆர்.டி.எஸ் நிறுவன பணியாளர்கள் அனைவரும் கொரோனா பெருந்தொற்றின் காலங்களில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் களப்பணிக்கு சென்று அறியாமையில், வறுமையில், வாழ்வாதாரத்தை இழந்த மக்களைத் தேடிச் சென்று உதவிகளை தொடர்ந்து வழங்கியும், ஊரடங்கு காரணமாக வெளியில் செல்ல முடியாமல் தவித்த மக்களுக்கு அலைபேசி வழியாக கொரோனா பெருந்தொற்று பரவாமல் காத்துக்கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் பகிர்ந்துக்கொள்ளப்பட்டன.

### மருத்துவர், செவிலியர்,சுகாதாரப்பணியாளர்களுக்கான சேவை:

கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிக்கும் கிராமப்புறங்களில் உள்ள மருத்துவர், செவிலியர் மற்றும் முன்கள சுகாதார பணியாளர்கள் அனைவருக்கும் முகக்கவசம், கையுறை, இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட கிருமி நாசினி ஆகியவை வழங்கப்பட்டு பொதுமக்களுக்கான மருத்துவ சேவையளிப்பவர்களை பாதுகாக்கும் பணியில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் முனைப்போடு செயல்பட்டது.

## ஆற்றுப்படுத்துதல் சேவை:

உலகையே புரட்டிபோட்டு வரும் கொரோனா வைரஸ் உலக நாடுகள் முழுவதிலும் ஏராளமான தாக்கங்களையும், உயிரிழப்புகளையும், பொருளாதார சரிவினையும் ஏற்படுத்தி வருகின்றது. அதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு தாங்கள் வாழ்வாதாரங்களை இழந்து நோய் பற்றிய அச்சத்துடன் வாழ்ந்த காலக்கட்டத்தில் கோவிட் 19 காரணமாக ஏற்பட்ட பொருளாதார இழப்புகளால் மனஉளைச்சலுக்கு ஆளாகி இருக்கும் மக்களை ஆற்றுபடுத்த சி.ஆர்.டி.எஸ் நிறுவனமானது காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு அகிய 2 மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவியல் ஆலோசனை மற்றும் ஆற்றுபடுத்துதல் சேவையினை பணியாளர்கள் மூலம் ஆலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு ஆற்றுபடுத்தியது.

## சட்டசிக்கல் மற்றும் காவல்துறை உதவி:

வறுமை மற்றும் வேலையின்மையின் காரணமாக சொந்த இடங்களைவிட்டு வேற்று மாநிலங்களுக்கு வேலைத்தேடி வந்து கூலிகளாக வேலை செய்துகொண்டிருக்கும் இளைஞர்கள் மற்றும் கூலித்தொழிலாளர்கள் கொரோனா ஊரடங்கின் காரணமாக வேலையிழந்து சொந்த இடங்களுக்கு திரும்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.



இந்நிலையில் சென்னையில் கட்டுமானம் மற்றும் கூலித்தொழிலாளர்களாக வேலைபார்த்து வந்த திருவண்ணாமலை மாவட்டத்தின் 12 குடும்பத்தை சேர்ந்த கூலித்தொழிலாளர்கள் கொரோனா பெருந்தொற்றால் அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கின் காரணமாக வேலையிழந்து உண்ண உணவின்றி சொந்த ஊருக்கு செல்ல முற்படும்போது செங்கல்பட்டு தாலுக்கா காவலர்களால் தடுக்கப்பட்டு, 8 மணிநேரம் விசாரணையில் வைக்கப்பட்டனர்.

இவ்வேளையில் திருவண்ணாமலை மாவட்ட சமூக சேவை மைய இயக்குநர் வழியாக தகவல் பெறப்பட்டு சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி.இ.அந்தோணிராஜ் அவர்கள் செங்கல்பட்டு நகர காவல் ஆய்வாளரை தொடர்புக்கொண்டு கூலித்தொழிலாளர்களை அழைத்துச்சென்று அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து பாதுகாப்பாக சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார். மேலும் மறைமலைநகர், மெல்ரோசாபுரம், சிங்கபெருமாள் கோவில், பொத்தேரி போன்ற பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்த 200 புலம்பெயர் தொழிலாளர்களை மறைமலைநகர் காவல் ஆய்வாளர் அவர்களின் உதவியோடு உணவு வழங்கி வாகனம் ஏற்பாடு செய்து திருவள்ளூர் இரயில் நிலையத்தில் இருந்து அவர்களின் சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தார்.

## முடிவுரை:

செங்கை மறைமாவட்டத்தின் சமூக சேவை மையமான எம் சி.ஆர்.டி.எஸ் நிறுவனமானது கடந்த 30 ஆண்டுகளாக செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய நிலையில் உள்ள மக்களை முன்னேற்றும் பணிகளை செய்து ஏழை மக்களின் வாழ்வு உயர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வளர்ச்சிப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வெற்றி கண்டுள்ளது. இந்நிறுவனத்தை தொடர்ந்து வெற்றியின் பாதையில் வழிநடத்திவரும் எம் நிறுவனத்தின் தலைவர் மேதகு. ஆயர் டாக்டர்.அ.நீதிநாதன், நிறுவனத்தின் செயல்பாடுகளில் உறுதுணையாய் இருந்து வழிகாட்டிவரும் நிறுவனத்தின் துணைத்தலைவர் பேரருட்பணி. ஞா.பாக்கிய ரெஜிஸ், பொருளர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன், பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், நன்கொடையாளர்கள், பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், இலக்கு மக்கள், மக்கள் பணியில் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் சி.ஆர்.டி.எஸ் நிறுவன பணியாளர்கள் அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.




"மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்" (மத்.25:40)

# நன்றிகளுடன்.......

Caritas INDIA
*The Joy of Service...*

caritas Germany

KOLPING INDIA

TASOSS

*The Little Way Association*

nabfins

BARMHERZIGE SCHWESTERN VOM HEILIGEN KREUZ INGENBOHL


**Chengalpattu Rural Development Society - CRDS**
No: 199A/4, Behind RC Cemetary, Thimmavaram
Kanchi High Road, Chengapattu Dt., - 603 101
Tamil Nadu, India

+91 9445586020
+91 6379493429

crdskanchigmail.com
crdschengai@rediffmail.com
www.crds.net.in

crds chengai | crdskanchi | Chengalpattururaldevelopment socity | CRDS DSSS | +919361131604